பக்கங்கள்:08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 05 செவ்வாய்க்கிழமை 18.04.2023 கதிர்159

## முதுகெலும்பை வளைக்காதும் தீர்மானம் எடுக்கத் தயங்கோம்

### பொது ஜன பெரமுன எம்.பி. காட்டம்

தேவைப்பட்டால் முதுகெலும்பை வளைக்காது, தீர்மானங்களை எடுப்பதற்கு தயங்கமாட்டோம் என்று பொது ஜன பெருமுன தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்றஉறுப்பினர் சஞ்சீன எதிரிமானே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஹரீன், மனுஷ போன்று ராஜிதசேனாரட்டனவும்ஆட்சியில் இணைந்துகொள்வராயின்எமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. அதனை நாம் எதிர்க்கப்போவதில்லை.

அவருக்கு அமைச்சுப் பதவியை வழங்குவதா இல்லையா என்பதை ஜனாதிபதியும், களுத்துறை மக்களுமே தீர்மானிக்கவேண்டும். ஜனாதிபதியின் அனைத்துச் செயற்பாடுகளையும் நாம் எதிர்க்கப்போவதில்லை.

தேவைப்படும் பட்சத்தில் முதுகெலும்பைவளைக்காதுநாம் தீர்மானங்களை எடுப்பதற்கும் தயங்கப்போவதில்லை. கடந்த காலத்தில் அரசியல் பேரிடர் இடம்பெறுவது போன்று சித்திரம் வரையப்பட்டது. அதற்குள் எம்மவர்களும் உள்ளனர்.

இப்போது மூழ்கும் ☞2

## மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்த ஆட்சி எதுவும் செய்யவில்லை

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

நாட்டில்நிலவும்மருத்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு ஆட்சியாளர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமல் விஜேசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அத்தியாவசியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தத் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்று நாம் பல தடவைகள் தெரிவித்திருந்தோம். இருப்பினும் ஆட்சியாளர்கள் அந்த விடயத்திற்கு இதுவரையில் தீர்வு வழங்கவில்லை.

ஆட்சியாளர்களிடம், மருத்துத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வினை வழங்கும் ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழர்கள் ஆயுதப் போராட்டக் களத்திற்குள் காலடி எடுத்து வைத்தபோது பல இயக்கங்கள் புற்றீசல்கள் போல உருவாகின. ஆனால் அவற்றில் சிலவற்றாலேயே ஆயுதப் பயிற்சிகளைப் பெற்று அடுத்த கட்டம் நோக்கி முன்னேற முடிந்தது. பாலஸ்தீனம், லெபனான் போன்ற இடங்களில் அன்று பயிற்சி பெற்றவர்கள் அந்தந்தப் பெயரர்களாலேயே அடையாளப்படுத்தப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார்கள். ஆனால், அப்படிப் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானது. அதற்கும் அடுத்த கட்டத்திற்குச் செல்வதற்கு இந்தியாவின் துணை வேண்டியிருந்தது. பெரும் எண்ணிக்கையான இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கியது இந்தியாதான்.

இந்தியா ஒரே நேரத்தில் பல இயக்கங்களுக்கும் பயிற்றி வழங்கியது. தனித் தனியாகத்தான் அவற்றை வழங்கியது. ஈழ விடுதலை என்கிற ☞2

## சிறிமாவோவுக்கு நேற்று தனித் தனி நினைவுகூரல்

சிறிமாவோ பண்டாரநயாக்கவுக்கு சந்திரிகா, மைத்திரி அணிகள் தனித்தனியாக நினைவு கூரல்களைச் செய்தன.

சசிறிமாவே பண்டார நாயக்கவின் 107ஆவது றிந்த நாள் திங்கட்கிழமை. இந்நிலையில், நேற்றுக் காலையில் சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான அணியனர் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ள அவரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.

அமைச்சர் மஹிந்த அமரவீர, அநுரபிரியதர்சன யாப்பா, பௌசி உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதனையடுத்து நேற்று மாலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் பிறிதொரு நிகழ்வும் அங்கு நடைபெற்றது.

இதில், பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, சரத் ஏக்கநாயக்க உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

## குரங்குகளை ஏற்றுவது நல்லது

-எஸ்.நிதர்ஷன்-

குரங்குகளின்தொல்லை அதிகமாக இருப்பதால் அதன் தொகையை குறைக்கும் வகையில் சீனாவிற்கு வழங்கின்றமை நல்லதொரு விடயமென நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு குரங்குகள் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் ☞2

## உண்மையா?

எஸ்.நிதர்ஷன்-

வடக்கில் சீனாவிற்கு காணிகள்வழங்கப்படுவதான தகவல்களில்உண்மைஇருப்பதாகத்தெரியவில்லைஎனத் தெரிவித்துள்ளநாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எனினும் வழங்குவதற்கு ஏதும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றனவா என ஆராயவேண்டுமென் ☞2

## ஏப்ரல் 21 கொழும்பில்

# உண்மை, நீதியை நிலைநாட்ட மனிதச் சங்கிலிப் போராட்டம்

### பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அழைப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று நான்கு வருடங்களாகின்றபோதும் இதுவரையில் உண்மை மற்றும் நீதி நிலை நாட்டப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பெரும் மனிதச் சங்கிலப் போராட்டமொன்றைஏப்ரல்21நடத்துவதற்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித். .

கொழும்பு பேராயர் இல்லத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் ஏப்ரல் 21 பெரும் மக்கள் அரணொன்றை உருவாக்குவதற்கு இன, மத பேதமின்றி அனைத்து தரப்பினரும் ஒன்றிணையவேண்டும்.

குறித்த தினத்தில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம் வரையில் கொழும்பு நீர்கொழும்பு பிரதான வீதியின் இரு மருங்கிலும் தொடர்ச்சியாக நாம் மனிதச் சங்கிலியாக நின்று நீதி கோரவுள்ளோம்.

காலை 8.45 மணிக்கு இருநிமிட் மௌன அஞ்சலியையும் செலுத்தவுள்ளோம், இந்த அஞ்சலியில் அனைத்து நாட்டில் ☞2

## புதிய பயங்கரவாதச் சட்டத்துக்கு மல்வத்து மகாநாயக்கரும் எதிர்ப்பு

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறி சுமங்கல தேரர் தெரிவிப்பு

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாரதூரமானது என்று மல்வத்து பீட மகாநாயக்கர் திப்படுவாவே சிறி சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்படுவாவே ஸ்ரீசுமங்கல தேரரை திங்கட்கிழமை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி வசந்தபண்டார புதியபயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பில் மகாநாயக் ☞2

## மத மேலாதிக்கத்தைத் திணிக்கும் நிகழ்ச்சி நிரலை நிறுத்தவேண்டும்

### சுமந்திரன் எம்.பி. ஆட்சியாளர்களிடம் வலியுறுத்து

எஸ்.நிதர்ஷன்

இந்த நாடு பௌத்த நாடு என்ற சிந்தனையில் நாடு முழுவதும் பௌத்த மயமாக்கலினூடாக மத மேலாதிக்கத்தை திணித்து அதன் மூலமாக இன மேலாதித்தத்தை திணிக்கின்ற ஒரு செயற்பாட்டை நிகழ்ச்சி நிரலோடுசெய்வதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எப்.ஏ.சுமந்திரன். அவர்மேலும்தெரிவித்ததாவது:

அண்மைக் காலமாக தமிழ் மக்களுடைய மரபுரிமைகள் மீறப்படுவதும் மத வழிபாட்டிடங்கள் தாக்கப்படுவதும் பௌத்த மயமாக்கலும் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதைநாங்கள் வன்மையாகக் கண்டித்து வருகிறோம்.

இது சம்பந்தமாக பல விதமான நீதிமன்ற நடவடிக்கைகளும் இருக்கின்றன. அதில் சிலவற்றில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றேன். நீதிமன்றத்தில் இருக்கின்ற விடயங்களை தவிர்த்துக் கொண்டு, உண்மையாகவே இந்த விடயங்கள் ஆரோக் ☞2

## ஆட்சியாளர்களின் மறக்கடிப்பு உத்தியை வெற்றிகொண்டோம்

### கத்தோலிக்கத் திருச்சபை அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மறக்கச்செய்யும் ஆட்சியாளர்களின் உத்தியை வெற்றி கொண்டுள்ளதாக கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப்பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவிதத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21 நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் நடந்து நான்கு வருடங்களை எட்டுகின்றது. இவ்விதமான சம்பவங்களை கால இழுத்தடிப்பின் அடிப்படையில் மக்களை மறக்கச் செய்யும் உபாயத்தையே ஆட்சியாளர்கள் பின்பற்றுவது வழமையாகும்.

ஆனால், நாம் ஆட்சியாளர்களின் அத்தகைய செயற்பாட்டைவெற்றிகொண்டுள்ளோம். தொடர்ச்சியாகக் குறித்த தாக்குதல்களுக்கு நீதி கோரியும், உண்மைகளை ☞2

## இலங்கை அரசு அடக்குகின்றது இந்தியா எம்மை வஞ்சிக்கிறது

### தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு கவலை

- எஸ்.நிதர்ஷன்-

இலங்கை அரசு எங்களை அடக்கி ஆளுகின்றது. இந்திய மத்திய அரசு வஞ்சிக்கின்றது. தமிழ்நாடு அரசு வாழ்வாதாரத்தை அழிக்கிறது. இவ்வாறு எங்களைச் பாதிக்கும் செயற்பாடுகளை நிறுத்தி விரைந்து தீர்வைக் காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் வி. சுப்பிரமணியம் கோரிக்கை விடுத்தார்.

இந்தியா கச்சதீவை வைத்துக்கொண்டு மீனவர் விவகாரத்தை அனுகாமல் தீர்வை ஏற்படுத்த முன்வர வேண்டுமென்றார்.

கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய ☞2

## ராஜிதவுக்கு அமைச்சுப் பதவி வழங்க 'மொட்டு' கடும் எதிர்ப்பு

களுத்துறை மாவட்டத்தில் பொதுஜனபெரமுனவின் வெற்றிக்காக ரோஹித்த அபேகுணவர்த்த உழைத்துக்கொண்டு இருக்கையில், ராஜித சேனாரட்ன அதன் தோல்விக்காக பாடுபட்டுக் கொண்டிருந்தார் என்பதை நினைவில்கொள்ளவேண்டும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொது ஜன பெரமுவின் சில உறுப்பினர்களைப் பரிந்துரைத்து அவர்களுக்க அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதியிடத்தில் கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லவில் உள்ள அக்கட்சியின் ☞2

## 13 குறித்து விக்கியிடம் கேட்டறிகிறார் ஆளுநர்

### நேற்று மாலை திடீர்ச் சந்திப்பு

ந.லோகதயாளன்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா திங்கட்கிழமை திடீரென முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் ☞2

## ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் பதவிகளுக்காக விலைபோகாது

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவிப்பு

பிரதமர் பதவிக்காகவோ அல்லது அமைச்சுப் பதவிக்காகவோ ஐக்கிய மக்கள் சக்தி விலைபோகாது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பு திங்கட்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் உட்பட முக்கிய உறுப்பினர்கள் பிரதமர் மற்றும் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டு இன்றைய ஆட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என்ற புனைவுச் செய்திகள் வெளியாகி வருகின்றது. அதுபற்றி எமது கட்சியின் தலைவர் தெளிவான ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இருப்பினும், அந்த விடயம் தொடர்ச்சியாக பேசுபொருளாக்கப்பட்டு வருகின்றது. இது ஆட்சியில் உள்ளவர்களின் திட்டமிட்ட செயற்பாடாகும். எம்மைப் பொறுத்தவரையில் பிரதமர் பதவிக்காவோ அல்லது அமைச்சுப்பதவிக்காகவோ ஐக்கிய மக்கள் சக்தி ☞2

## பண்ணையில் சிலை அகற்றலை எதிர்த்து இந்து அமைப்புகள் நீதிமன்றை நாடும்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்பண்ணையில் - தீவக வீதியில் அமைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுவதற்கு ஆட்சேபனைதெரிவித்துஇந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்றுயாழ்ப்பாணம்நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாவது என்று திங்கட்கிழமை தீர்மானித்தனர்.

நல்லை ஆதீனத்தில் இந்து அமைப்பு பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் செய்தியாளர்களிடம் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

சித்திரைப் புதுவருடமன்றுஅதிகாலைபண்ணைச் சுற்றுவட்டப் பகுதிக்கு அண்மையில் வைக்கப்பட்ட நாகபூசணிஅம்மன்சிலையை



அகற்றுவது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பிலான கலந்துரையாடலொன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் இரகசியமாக இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இந்து சமயத்தை ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே நோக்கத்துக்காகப் புறப்பட்டு வந்த எல்லா இயக்கங்களையும் ஒருங்கிணைத்து ஒற்றுமைப்படுத்துவதற்குப்பதிலாக தனித் தனியாக அந்தந்த இயக்கங்களுக்குத் தனித் தனியாக ஆயுதப் பயிற்சி வழங்கியது. இதன் விளைவு இயக்கங்கள் தங்களுக்குள் ஆயுதங்களைக் கொண்டே மோதிக்கொள்ளும் நிலையையும் ஏற்படுத்தியது. ஆயுதக் குழுக்களைத் தாம் கையாள்வதற்கு வசதியாகவே இந்தியா அப்படி நடந்துகொண்டது.

அதிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கம் விலகியது. இந்தியாவால் கையாளப்பட முடியாத அமைப்பாக, தமிழ் மக்களுக்கும் மட்டுமே விசுவாசம் கொண்ட அமைப்பாகஅதுதன்னைநிலைநிறுத்த முற்பட்டபோது மற்றைய இயக்கங்களை இந்தியா அதற்கெதிராக வளர்த்தெடுக்க முற்பட்டது. குறிப்பாக ஈபிஆர்எல்எவ் அமைப்பை இந்தியா தனக்குரிய அமைப்பாக அடையாளப்படுத்தி அரவணைத்தது.

இப்போது மீண்டும் வரலாறு நிகழத் தொடங்கியிருக்கிறதோ என்கிற அச்சம் எழுந்துள்ளது. அண்மையில் நடந்த மூன்று அடுத்தடுத்த சம்பவங்கள் பற்றி இன்று உங்களுக்குச் சொல்லப்போகின்றேன். அவற்றின் நேர்கோட்டுத் தொடர்ச்சியைநீங்களேஊகித்து உணர்ந்துகொள்ளுங்கள்.

முதலாவது சம்பவம் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கடைசியாகக்கொழும்புவந்து திரும்பியபோதுதமிழ்க்கட்சிகள் அனைத்துக்கும் இந்தியத் தூதரகத்தால் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. தொடக்கத்தில் இதுபோன்ற சந்திப்புக்களுக்கு கூட்டமைப்புக்கு மட்டுமே அழைப்பு அனுப்பப்படுவது வழமை. அதன் பின்னர் சில பல சந்தர்ப்பங்களில் முன்னணியினரும் அழைக்கப்பட்டனர். இந்த இரு தரப்புக்களும் நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தவைஎன்கிறவகையில் அவைஅழைக்கப்பட்டதில்ஒரு நியாயம் உண்டு. கடைசித் தடவைஅழைக்கப்பட்டபோது இந்த இரு தரப்புக்களுக்கும் மேலதிகமாக ஈபிஆர்எல்எவ் அமைப்பும் சந்திப்புக்கு இந்தியத் தூதரகத்தால் அழைக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது சம்பவம் சித்திரைப்புத்தாண்டையொட்டி நடந்தது. புத்தாண்டையொட்டி இந்தியத்தூதரகக் கிளையால் 500 பேருக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என்று எல்லா இடங்களுக்கும் இந்த உதவிப் பொருட்கள், அனேகமாக உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த அனைத்துப் பொதிகளும் ஈபிஆர்எல்எவ்அமைப்பினால் தூதரகத்திற்கு வழங்கப்பட்ட பட்டியலில் உள்ளோருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. அது வழங்கப்படும் நிகழ்வில் இந்தியதூதரகஅதிகாரிகளோடு ஈபிஆர்எல்எவ் அமைப்பின் தலைவர்கள் அல்லது உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம்நீர்வேலிப் பகுதியில் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்ட நிகழ்வில் இந்தியத் தூதரக அதிகாரிகளுடன்ஈபிஆர்எல்எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் சகோதரரான வடமாகாண சபை முன்னாள் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனும் கலந்துகொண்டார். மன்னாரில் உதவிப் பொருட்களை ஈபிஆர்எல்எவ் அமைப்பினர் மட்டுமே வழங்கிவைத்தனர். ஏனைய மாவட்டங்களிலும் ஈபிஆர்எல்எவ்அமைப்பினரே அவற்றை வழங்கினர்.

மூன்றாவது சம்பவம் நேற்று நடந்தது. வடக்கு மாகாண ஆளுநர் திடீரென அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வவரனைச் சந்தித்தார். நியதிச் சட்ட உருவாக்கங்கள்பற்றிஅவர்கள் கலந்துரையாடினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச்சந்திப்புக்கும்மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனும் அழைக்கப்பட்டிருந்தார். அவர் துறைசார் அறிவு பெற்றவர் என்பதில்மாற்றுகருத்தில்லை. ஆனால், ஆளுநர்தன்பாட்டில் இரு நியதிச் சட்டங்களை உருவாக்கி, அப்படி அவர் செய்யமுடியாதுஎன்றுசட்டமா அதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றத்தில்தெளிவுபடுத்திய பின்னர் அவர் 13 குறித்து முன்னாள் முதலமைச்சரிடம் கேட்டறிகிறார்என்பதும்அந்தச் சந்திப்புக்கு சர்வேஸ்வரன் அழைக்கப்பட்டிருக்கிறார் என்பதும் ஆழமாகக் கவனத்தை ஈர்க்கின்றன.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கை ஆட்சியாளர்கள்முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கை ரெலோ மூலமாகக் கொண்டுவரப்பட்டது. ஆனால் தமிழ் அரசுக் கட்சி அதனை மட்டும்தனிப்பட்ட கோரிக்கையாக்காமல் தீர்வு தொடர்பான விடயத்தில், தமிழர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான அடித்தளமாக 13ஐ நடைமுறைப்படுத்தும்படியே அந்தக் கோரிக்கையை மாற்றிக்கொண்டது.

இத்தகைய பின்னணியில் தமிழ் அரசுக் கட்சியைத் தாண்டி, அதனைஒதுக்கிவிட்டு மீண்டும் ஈபிஆர்எல்எவ் கட்சியை தன்னிஸ்டப்படி ஆட்டிவைப்பதற்கு இந்தியாவும் அதன் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு அதிகாரிகளும் விரும்புகிறார்களா?

**இடிமின்னல்**

## உண்மை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்தப் போராட்டத்தின் பின்னர் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் மக்கள் சந்திப்பொன்று எனது தலைமையில் நடைபெறவுள்ளது - என்றார்.

அரசியல் சூழ்ச்சி

இதேவேளை, நாடாளுமன்ற தெரிவிக்குழுவின் அறிக்கையின் நிறைவேற்று சராம்சத்தின் மூன்றாவது பக்கத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஓர் அரசியல் சூழ்ச்சி என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில்யாரையேனும் ஆட்சிக்குகொண்டுவருதற்காக இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாஎன்றபெரும்சந்தேகமும்உள்ளது. முன்னாள்சட்டமாஅதிபரும்இத்தாக்குதலொரு மிகப்பெரும் சூழ்ச்சி என்று அறிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டதிலிருந்து நாட்டை ஆட்சி செய்த ஜனாதிபதிகள், அரசியல்வாதிகள் அரச அதிகாரிகள் தொடர்ச்சியாகக் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுகின்றார்கள். குறிப்பாக தற்போதைய ஜனாதிபதியும், அவரது ஆட்சி அரசியல் தரப்பினரும், கூட அதிகாரிகளும் இதில் உள்ளடங்குகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டவர்கள், அந்த மிலேச்சத்தனமான செயற்பாடு ஊடாக இன, மத வாதத்தினை தோற்றுவித்து ஆட்சி அதிகரத்தினைக் கைப்பற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்திருக்கின்றனர் என்பது மிகவும் தெளிவாகின்றது.

அந்த வகையில் குறித்த குற்றவாளிகள் தற்போது அரசியல் அதிகா ரங்களைப் பயன்படுத்தி தண்டனையிலிருந்து விலகி பாதுகாப்பாகவும், சுமந்தி ரமாகவும் நடமாடுவதற்கும் உரிய ஏதுக்களை தோற்றுவித்துள்ளனர். அத்தோடு எதிர்காலத்திலும் இதுபோன்று இன, மதவாத்தினை தோற்றுவித்து ஆட்சியைக்கைப்பற்றுவதற்காகப் படுகொலைகளைச் செய் வதற்குத் தயங்கமாட்டார்கள் என்ற நிலைமைகளும் உள்ளன - உள்ளன என்று பேராயர் மேலும் தெரிவித்தார்.

சாரா ஜஸ்மின்

அத்தோடு, கட்டுவாப்பிட்டியவில்தாக்குதல்நடத்தியசாரா ஜஸ்மின் உயிரிழந்துள்ளார் என்று மூன்றாவது தடவையாகவும் நடத்திய மரபணுப் பரிசோதனையில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், குறித்த மரபணுப் பரிசோதனையானது எவ்விதமான முடிவு வரவேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுத்தான் நடத்தப்பட்டுள்ளது.

ஆகவே, அந்த மரபணுப் பரிசோதனையை வெளிப்படைத்தன்மையுடன் மீண்டும் முன்னெடுக்கப் படவேண்டும். அது சுயதீனமாக முன்னெடுக்கப் படவேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். .

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இதன்போது, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது, மக்களின் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் உரிமையை முழுமையாக மறுக்கின்றது. நீதிமன்றத்திற்குக் காணப்பட்ட அதிகாரம் பொலிஸாருக்கு மாற்றுகின்றது. பிரதி பொலிஸ் மா அதிபர்கள் நபர் ஒருவரை ஒருவருடத்திற்கும் அதிகமான காலம் சிறையில் அடைக்க முடியும் என்ற அதிகாரத்தை வழங்குகின்றது.

அதுமட்டுமன்றி ஜனாதிபதியால் எந்தவொரு அமைப்பையும்தடைசெய்ய முடியும். முன்னைய ஆட்சியாளர்கள் சரியாகக் கடமையை நிறைவேற்றாமையால் நாம் அதிலிருந்து விலகினோம். அந்த ஆட்சியில் அமைச்சர்களுக்கான சரியான கடமைகள் வழங்கப்படவில்லை -என்றார்.

தான் ஈந்த விடயங்களை மாகாநாயக்க தேரரிடம் எடுத்ததுக்கூறினார் என்றும் மகாநாயக்க தேரர், குறித்த விடயங்களை செவிமடுத்ததோடு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டுலம் பாரதூரமானது என்று குறிப்பிட்டார் எனவும் தெரிவித்தார்.

## மருந்துத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயலுமை காணப்படவில்லை. சுகாதார அமைச்சும் அதே நிலைமையில்தான் உள்ளது.

கடந்த ஆண்டின் நடுப் பகுதியிலேயே முக்கியமான மருந்து வகைகள் 80 முதல் 90 வரையில் தீர்ந்து போயுள்ளதாக தெரிவித்திருந்தோம். இந்த ஆண்டின் முற்பகுதியில் அந்த எண்ணிக்கை 120ஆக உயர்வடைந்துள்ளது. அதேபோன்று 150இற்கும் அதிகமான மருந்துகள் போதுமானளவில் கையிருப்பில் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான உபகரணங்கள், ஆய்வு கூடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான இரசாயனங்கள் மற்றும் உபகரணங்கள் கையிருப்பில் இல்லை.

இந்த நிலைமையால் கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட நாட்டின் கிராமப்புற வைத்தியசாலைகள் வரை நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன. இதனால், அப்பாவி மக்களே பாதிக்கப்படுகின்றனர் - என்றார்.

## ஆட்சியாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தக்கோரியும் வலியுறுத்தி வருகின்றோம்.

அதேநேரம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ சட்டத்தின் முன் நிறுத்தும் வரையில் நாம் இந்தச் சம்பவத்தை மறக்கப்போவதில்லை.

இந்தச்செய்தியைநான்கு வருடங்களுக்குப் பின்னரும் ஊழல்களும், குற்றங்களும் புரிந்தஅரசியல்வாதிகளுக்குச் சொல்லிவைக்கின்றோம் - என்றார்.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களின்தொடர்ச்சியான அத்துமீறல்களால்நாளாந்தம் எமது மீனவர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைத் தடுத்துநிறுத்தவேண்டுமென நாங்களும் தொடர்ச்சியாக இரண்டுநாடுகளிடமும்கோரி வருகின்றோம்.

ஆனால் இரண்டு நாடுகளும் காலம் தாழ்த்தும் நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றன. அதிலும் மீனவர் விவகாரம் தொடர்பில் பேச்சு என்று கூறியே கால இழுத்தடிப்பு செய்யப்படுகிறது.

இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டு சில தீர்மானங்களும்எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆகையினால் அந்தத் தீர்மானங்களை முதலில்நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

காலம் காலமாகத் தமிழ் நாட்டு முதலமைச்சர்கள் உட்பட பலரும் அந்த நாட்டின் பிரதமருக்கும் மத்திய அமைச்சரவைக்கும் கடிதங்களையே வழக்கமாக எழுதி வருகின்றனர். இவ்வாறான நிலைமையில் தற்போது கச்சதீவை மீட்க வேணாடுமென தமிழக முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கின்றார்.

கச்சதீவிற்கும் மீனவர் அத்துமீறல்களுக்கும்எந்தவித தொடர்பும்இல்லை. கச்சதீவை வைத்துக் கொண்டு மீனவர் விவகாரத்தை கையாளாமல் உரிய நடவடிக்கையை குறிப்பாக நிரந்தர தீர்வை தமிழ்நாடு முதலமைச்சர் ஏற்படுத்தமுன்வரவேண்டும்.

இலங்கை அரசு எம்மை அடக்கி ஆளுகிறது. இந்திய மத்திய அரசு வஞ்சிக்கிறது. தமிழ்நாடு அரசு வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்கிறது. இப்படி எங்களை அடக்கி ஆக்கிரமித்து அழிக்காமல் நிம்மதியாக வாழ விடுங்கள் என்றுதான் கேட்கிறோம். ஆகையால் தான் இதற்குரிய தீர்வை விரைந்து அனைவரும் எடுக்க வேண்டும் - என்றார்.

## மத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியமானவை அல்ல. மத மேலாதிக்கத்தை திணித்து அதன் மூலமாக இன மேலாதிக்கத்தை திணிக்கின்ற ஒரு நிகழ்ச்சி நிரலோடு ஆட்சியாளர்கள் செயல்படுத்துவதை எங்களால் காண முடிகிறது.

இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் குறிப்பாக இந்து மத வழிபாட்டிடங்கள் பாரம்பரியமாக மக்களால் வணங்கப்பட்டுவந்தஇடங்கள் அழிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

மக்களுக்கு இருக்கிற அந்த மத அடிப்படையான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அதை ஆட்சியாளர்களோ எவரோ தடுக்க முடியாது. சிந்திக்கிற உரிமையும், தான் சார்ந்து இருக்கிற மதத்தை வழிபடுகிற உரிமையும், எந்த மதத்தையும் சேர்ந்து கொள்கிறஉரிமையும், கடவுள் இல்லையென்று சொல்லுகிற உரிமையும் ஓர் அடிப்படை உரிமை. அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவேஒவ்வொருவரும் அந்த அடிப்படையில் நடந்து கொள்வதற்கான சுயாதீனம் சுதந்திரம் நாட்டிலே இருக்க வேண்டும். அதைவிடுத்து இந்தநாடுமுழுவதும்பௌத்த நாடுஎன்கின்றஎண்ணத்தோடு ஆட்சியாளர்களின் உதவியோடு இப்படியான செயற்பாட்டில் மதகுருவினரும் தொல்லியல் திணைக்களத்தினரும் வேறு சில திணைக்களங்களும் செயற் படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் - என்றார்.

## ராஜிதவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகத்தில்நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜித சேனாரட்னவுக்கு அமைச்சுப் பதவியை வழங்கும் பட்சத்தில் பொது ஜனபெரமுனவின்ரோஹித்த அபேகுணவர்த்தனவுக்கும் முக்கிய பதவி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதாக நீங்கள் (ஊடகவியலாளர்கள்) தான் கூறுகின்றீர்கள்.

கட்சியின் செயலாளர் என்ற அடிப்படையில் என்னிடத்தில் அவ்விதமான விடயங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இந்த இடத்தில் ஒரு விடயத்தினைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

நாம் பொது ஜன பெரமுனவின் சில உறுப்பினர்களை பரிந்துரைத்து அவர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குமாறு ஜனதிபதியைக் கோரியுள்ளோம்.

அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் அச் செயற்பாடுகள் இடம்பெறும்;.

களுத்துறை மாவட்டத்தினைப்பொறுத்தவரையில் அந்த மாவட்டத்தில் பொது ஜனபெரமுவின்வெற்றிக்காக ரோஹித்த அபேகுணவர்த்த தலையேற்று மிகக் கடுமையாக உழைத் தவர் என்பது பகிரங்கமானது.

அக்காலத்தில் ராஜித சேனாரட்ன பொதுஜன பெரமுனவின் தோல்விக்காக செயற்பட்டவர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே, அவருக்கு அமைச்சுப்பதவி அளிப்பது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிக்கவேண்டும். அது பற்றி நாமும் கலந்துரையாடுவோம் - என்றார்.

## குரங்குகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது..

நாட்டில்பலஇடங்களிலும் குரங்குகளின்தொல்லைமிக மோசமாகஇருக்கிறது.அதிலும் குறிப்பாகயாழ்ப்பாணத்தில்பல இடங்களில், தென்மராட்சி பகுதியில்குரங்குகளின்தொல்லை மிக மமி மோசமாக இருக்கிறது.

நாடு முழுவதும் குரங்குகளுடைய தொகை அதிகரித்தே வருகிறது.

ஆகையினாலேஏதாவது ஒருவிதத்திலேகுரங்குகளின் தொகையை குறைக்க முடியுமாக இருந்தால் அது நல்லது என்றுதான் நான் பார்க்கின்றேன் - என்றார்.

## 13 குறித்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்துப் பேச்சு நடத்தினார்.

நல்லூர் ஆலய வீதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின்இல்லத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் மற்றும் மருத்துவர்கே.விக்னேஸ்வரன் ஆகியோர் இச் சந்திப்பில் பங்குகொண்டிருந்தனர்.

மாலை 5 மணிமுதல் 6.30மணிவரைஇடம.பெற்ற இச்சந்திப்பில்13ஆம்திருத்தச் சட்டம் மற்றும் யாழில் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலை தொடர்பில் பொலிசார் மேற்கொண்டுள்ள வழக்கு, ஆளுநர் நிறைவேற்றிய நியதிச்சட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்நிறைவில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தார்.

## உண்மையா?.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் கூறியுள்ளார்.

கிளிநொச்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் சீனாவிற்கு காணிகள் வழங்கப்பட போவதாக வெளியாகிய தகவல்கள் தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் சீனாவிற்கு காணி கொடுப்பதான ஒரு தகவலும் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. அதிலேஉண்மைஇருப்பதாக இப்போது எனக்கு தெரியவில்லை.

ஆனாலும் அது குறித்து நாம் தேடிப் பார்க்க வேண்டி இருக்கின்றது. ஏனெனில் அவ்வாறு காணிகள் வழங்குவதற்கு ஏதேனும் சூழ்ச்சிகரமான திட்டங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து நாங்கள் ஆராய வேண்டும் - எனவும் தெரிவித்தார்.

## முதுகெலும்பை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் இருந்த கப்பல் மீட்கப்பட்டு விட்டது போன்று தோற்றப்பாடு காண்பிக்கப் படுகின்றது. இந்த விடயங்களை ஆழமாக புரிந்து கொள்ளவேண்டும். கப்பலைப் பாதுகாப்பவர் ஜனாதிபதியாக இருந்தாலும், ஒட்டுமொத்த பிடியும் அவரிடத்தில் இல்லை என்றார்.

## ஐக்கிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலைபோகாது என்பது உறுதியானது.

பிரதமர் பதவி எம்மைத் தேடிவந்தபோதும் உரியமக்கள் ஆணை இல்லாமையால் அதனை கட்சித் தலைமை ஏற்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது - என்றார்.

## பண்ணை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித் துவப்படுத்தும் பல அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்த சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டோர் அதன் நிறைவில் பண்ணை சுற்று வட்டத்தில் வைக்கப்பட்டுள்ள நாகபூசணி யம்மன் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வழிபாட்டிலும் ஈடுபட்டனர். இதன்போது அப்பகுதியில் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



காலைக்கதிர் Kalaikkathir

# பங்களாதேஷின் கடனை அடைக்கும் காலம் நீடிப்பு

## முதற் தவணைக்கே மேலும் 6 மாதம் கேட்டது இலங்கை

பங்களாதேஷிடமிருந்து பெற்ற கடன்தொகையில் முதற்தவணைக் கொடுப்பனவான 200 மில்லியன் டொலர்களை மீளச் செலுத்துவதற்கான காலஎல்லையை அந்நாடு நீடித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதற்கமைவாக, எதிர்வரும் செப்டெம்பர் ஒக்டோபர் காலத்தில் குறித்த தொகை நீடிக்கப்பட்ட காலத்திற்கான வட்டியுடன் செலுத்தப்படும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பங்களாதேஷிடமிருந்து பெற்ற கடன்தொகையை மார்ச் மாத இறுதிக்குள் மீளச் செலுத்த வேண்டியிருந்தது. எனினும் இலங்கை மத்திய வங்கியால் அத்தொகையை மீளச் செலுத்த முடியவில்லை.

இதையடுத்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி.நந்தலால் வீரசிங்கவுக்கும், பங்களாதேஷ் மத்திய வங்கியின் ஆளுநர் அப்துல் ரூப் தலுத்தாருக்கும் இடையில் அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் சந்திப்பு நடந் தது. இதில் கடனை மீளச் செலுத்துவதற்கான காலத்தை நீடிக்கும்படி இலங்கை சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை பங்களாதேஷ் ஏற்றுக்கொண்டது.

இது தொடர்பில் பங்களாதேஷ் மத்திய வங்கியின் ஆளுநர் அப்துல் ரூப் தலுத்தார் தெரிவிக்கையில், இலங்கை செலுத்த வேண்டிய கடன் தொகைக்கான கால எல்லையை நீட்டிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அதற்கு அமைவாக 200 மில்லியன் டொலர்களை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் மீளச் செலுத்த இலங்கை இணங்கியுள்ளது.

அதன் பின்னர் மீண்டும் கால எல்லை நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அதேநேரம், நீடிக்கப்பட்ட கால எல்லைக்கான வட்டியை இலங்கை செலுத்த வேண்டியுள்ளது - என்றார்.

# கடற்படைச் சிப்பாய் மாரடைப்பால் சாவு




முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படைத் தளத்தில் பணியாற்றிவந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் கடற்படைத்தளத்தில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

பதுளையைச் சேர்ந்த டபிள்யு எம் எல் பி வணசிங்க என்ற சிப்பாயே உயிரிழந்தவராவார். இவர் கடற்படைத்தளத்தில் புலனாய்வாளராக பணியாற்றி வந்துள்ளார். ஏப்ரல் 15 தூங்கச் சென்ற இவர் மறுநாள் காலையில் சடலமாகக் காணப்பட்டார் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் திங்கட்கிழமை உடற்கூறாய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது மாரடைப்பு காணமாக அவர் உயிரிழந்தமை தெரியவந்தது.

சடலத்தின் மீதான பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிசார் விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர்

# சைவப் புலவர் சங்க ஏற்பாட்டில் பலருக்கும் சிவதீட்சை வழங்கல்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி சிவகுருநாத பீடம் சமாதி கோவிலிலும்,

மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் மேற்படி தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தன. பலர் ஆர்வமாக இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிவ தீட்சை பெற்றுக்கொண்டனர்.






# தேசிய பாடசாலை மாணவி மெதகிரிய விபத்தில் சாவு

மெதகிரிய பிசோபுர பிரதான வீதியின் வட்டதாகேய சந்தி பகுதியில் லொறியும் ஓட்டோவும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மெதிரிகிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற விபத்தில் கே.எம். சஞ்சனா சத்சரணி ஜயரத்ன என்ற தேசிய பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியே உயிரிழந்துள்ளார்.

நவநகர பிரதேசத்தில் பயிற்சி வகுப்புக்குச் செல்வதற்காக குறித்த மாணவியும் அவரது நண்பர்கள் ஐவரும் ஓட்டோவில் பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# காலியில் ரயில் முன்பாய்ந்தவர் பல்கலை மாணவர் என தகவல்!



பெலியத்தவிலிருந்து மருதானை நோக்கிச் சென்ற காலி குமாரி கடுகதிரயிலால் மோதப்பட்டு உயிரிழந்தவர் பல்கலைக்கழக மாணவர் எனத்தெரியவந்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி காலை காலி பிங்கெய என்ற இடத்துக்கு அருகில் இந்த இளைஞர் ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரியவருகிறது.

காலி அம்பலான்வத்தையில் வசிக்கும் பல்கலைக்கழக மாணவன் நிமல மதுஷான் தஹநாயக்க (வயது - 25) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்க் கட்சிகளுக்கு என்னவாயிற்று?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டால் அல்லது உரிய திகதியில் நடத்தப்படாமல் விட்டால் மக்களைத் திரட்டி வீதிக்கு இறங்கி நாட்டை இரண்டுபடுத்துவோம் என்று வீரவசனம்பேசின எதிர்க்கட்சிகள். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, டலஸ் அணி ஆகியவை, முதல் தடவையாகத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னரே இது தொடர்பில் வீராவேசப் பேச்சுக்களை அள்ளி வீசின. அந்தப் பேச்சுக்களைக் கேட்டபோது தேர்தலுக்காக மீண்டுமொரு மக்கள் கிளர்ச்சியே வெடிக்குமோ என்கிற அச்சம் எட்டிப்பார்க்கவும் தவறவில்லை.

இப்போது இரண்டாவது தடவையாகவும் உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்டுவிட்டது. அதுவும் தேர்தல் இனி எப்போது நடக்கும் என்று நாள் குறிக்கப்படாமலேயே ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. ஆனால், எதிர்க் கட்சிகள் எவையும் துள்ளிக் குதிக்கக் காணோம். அவற்றின் வீராவேசப் பேச்சுக்களைக்கூடக் காணோம். காற்றுபோன பலூன் மாதிரி ஆங்காங்கே தேர்தல் பற்றிய சில முனங்கல்களைத் தவிர்த்து, மக்களாட்சி மக்களுக்கு வழங்கிய உரிமையை மீட்டெடுக்கும் போராட்டங்களில் எதிர்க் கட்சிகள் குதிக்கப் போவதற்கான முன்னேற்பாடுகள் எவற்றையும் காணோம்.

அரசியல் அரங்கத்தில் அண்மைக் காலமாக கவனத்தை ஈர்த்து வந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரான வசந்த முதலிகேயின் சத்தத்தைக்கூடக் காணோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஒரு நிகழ்வை நடத்துவதற்கு முற்பட்டு வெற்றியளிக்காது திரும்பிய பின்னர் அவரது எதிர்ப்புக் குரலையும்கூடக் கேட்கமுடியவில்லை.

என்ன செய்கின்றன எதிர்க் கட்சிகள்? ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பேரணி மீது அரச காவல்துறையினரும் படையினரும் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்தும் அந்தத் தாக்குதல்களின் காரணமாக இருவர் உயிரிழந்ததை அடுத்தும் எதிர்க் கட்சிகள் அச்சமடைந்துவிட்டனவா? இனிமேல் போராட்டங்களுக்கு மக்கள் வரமாட்டார்கள் என்று எண்ணி விட்டார்களா?

அதுபோன்றே தொழிற்சங்கங்களும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றால் நாட்டை முடக்குவோம் என்று வீர வசனங்கள் பேசின. ஆனால், அவற்றுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் பேச்சுக்கூட நடத்தாமல் ஏமாற்றினார். பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) கடன் அங்கீகரிக்கப்பட்டதும் தொழிற்சங்கங்களுடன் பேசி அவர்களின் பிரச்சினைகளுக்கு முடிவு எட்டப்படும் என்று ஆட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அத்தகைய பேச்சு எதுவும் நடத்தப்படவில்லை என்று தொழிற்சங்கங்களே கூறுகின்றன. தாம் ஏமாற்றப்பட்டோம் என்று அவை ஏற்றுக்கொள்கின்றன. ஆனால், அதற்கெதிராக எந்த உறுதியான எதிர்ப்பையும் அவை பதிவு செய்வதாக இல்லை.

நாடு அமைதியாகவே இருக்கின்றது. ஆட்சியாளர்கள் அதை இன்னும் அமைதியாக்குவதற்கான சட்டங்களை இயற்றுவதில் கவனமாக, குறிக்கோளாக இருக்கின்றார்கள். சித்திரை 25 புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான முன்முயற்சிகளில் அவர்கள் இறங்குகின்றார்கள். ஆனால், எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அந்தச் சட்டம் தங்களைக் குறிவைத்துத்தான் வருகின்றது என்று தெரிவித்தாலும் பெரியளவில் எந்த எதிர்ப்பையும் காட்டுவதாக இல்லை.

மொத்தத்தில் எதிர்க்கட்சிகளின் எதிர்புணர்வு மழுங்கடிக்கப்பட்டுவிட்டதா அல்லது ஆட்சியாளர்கள் செய்பவை எல்லாம் நியாயமானவை என்று அவற்றுக்குத் தோன்றுகின்றனவா? இன்னும் சொல்லப்போனால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ள முழு அடைப்புப் போராட்டத்தை நாடு முழுவதற்கும் விரிவாக்கி அனைத்துத் தரப்புகளதும் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் பதிவு செய்வதற்கு எதிர்க் கட்சிகள் முன்வந்திருக்கவேண்டும். இப்போதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. ஒட்டுமொத்த தேசத்தையும் அன்றைய தினம் அரசுக்கு எதிராகத் திருப்ப எதிர்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து முன்வரவேண்டும்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பின் கூர்முனை மழுங்கிப் போனால் நாடு முழுமையான அடக்குமுறைக்குள் செல்வதுடன் அரசுத் தலைவர் பதவி அதிகாரங்களுக்கு அடிபணிந்து போகும் நிலையும் ஏற்படும்.

# சிறிமாவின் பொருளாதாரக் கொள்கையை தொடர்ந்திருந்தால் வங்குரோத்து வந்திராது

### சந்திரிகா இப்படி உரை



சிறிமாவோவின்பொருளாதாரக் கொள்கையை பின்பற்றியிருந்தால்நாடுவங்குரோத்து அடைந்திருக்காது என்று முன்னாள்ஜனாதிபதிசந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் 107ஆவது பிறந்த நாள் திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சந்திரிகா மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீமாவோ பண்டாரநயக்க, நாடு பொருளாதார ரீதியாக எழுச்சி அடைவதற்கான கொள்கைகளையே வகுத்தார். அவற்றை நடைமுறைப்படுத்தவும் முனைந்தார். ஆனால் அதனைப் பின்தொடர்வதற்கு யாரும் விரும்பியிருக்கவில்லை.

இதனால்தான் தற்போது நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. நாடுதற்போது பின்நோக்கிப் பயணிக்கின்றது. இந்தநிலையிலாவது அவருடைய கொள்கைகளின் பெறுமதியை உணர வேண்டியது கட்டாயமானது -என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக உள்ளாட்சி தேர்தல் நடக்கவேண்டும்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்து



ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் பதினான்கரை மாதங்கள் உள்ள நிலையில் தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தலை தாமதிக்காதுநடத்தவேண்டும் என்றுபேராசிரியர்ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலார் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் இன்னமும் இரண்டு வருடங்களின் பின்னரேயே நடத்தப்படும் என்று ஆளும் தரப்பில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் இருப்பது பதின்னாகரை மாதங்களே ஆகும். ஆகவே அக்காலத்தில்அந்தத்தேர்தலை நடத்தியே ஆகவேண்டும்.

அதற்கு முன்னதாக தற்போதுஉள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலை நடத்த வேண்டும்.அதனைத்தாமதிக்க முடியாது. இவ்வாறு தேர்தல்களைஆட்சியில்இருப்பவர்கள் தமது எண்ணப்படி தாமதிக்க முனைந்து கொண்டிருப்பது அல்லது தமக்கான சரியான தருணம் வரும் வரையில் காலங்கடத்துவது போன்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் பிழையான முன்னுதாரணத்தினையே ஏற்படுத்தும் - என்றார்.

# எல்லை மீள்நிர்ணயம் தொடர்பான குறைபாடுகளை அறியத் தாருங்கள்

### சிறிதரன் எம்.பி. கோரிக்கை



தேசிய எல்லை நிருணய ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிர்ணயவரைவுஅறிக்கையில் பல்வேறுகுறைபாடுகள்உள்ளதையும், அதுதொடர்பில் மக்களிடத்தே அதிருப்தி நிலவுவதையும் அவதானிக்க முடிவதாகநாடாளுமன்றஉறுப்பினர் சிவஞானம்சிறீதரன் தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது;

கிளிநொச்சிமாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் எவையும்பெறப்படாமலேயே இவ் எல்லை மீள் நிருணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, மக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, நிர்வாகத் தொடர்பு, சமூக ஊடாட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட காரணிகள் கருத்திற்கொள்ளப்படாமை மாவட்டத்தின் சமூக, அரசியல் மற்றும்நிர்வாகஉறுதிப்பாட்டில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பில், அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்கள் தங்களின் எழுத்துமூல பரிந்துரைகளை, எல்லை மீள் நிருணயக் குழுவின் மாவட்டத் தலைவரான மாவட்டச் செயலருக்கு முகவரியிட்டு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு பிரதியிட்டு ஏப்ரல் 25 கிடைக்கும் வகையில் அனுப்பிவைப்பதன் மூலம், உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும்- என்றார்.

# சஜித்தின் ”டீல்” குற்றச்சாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று பதில்

சஜித் பிரேமதாச, 'டீல்' செய்தா மனோ, ஹக்கீம், திகாம்பரம், ரிஷாத் உள்ளிட்டவர்களை தனது பக்கம் இழுத்துக்காண்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பலித்த ரங்கே பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐ.தே.கவின் தலைமையகமானசிறிகொத்தவில்இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின்தலைவருமானசஜித் பிரேமதாச வெளியிட்டுள்ள, ஆளும்தரப்புதமது அணியை சிதைப்பதற்காக பேரம் பேசுகின்றது என்றும் ஊடக பிரசார மூலோபாயத்திதைப் பயன்படுத்தி ஐ.ம.ச க்தியை சீரழிப்பதாகவும் குறிப்பிட்டு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கைதொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாசவின் கட்சியினருடன் டீல் பேசி அவர்களைஎமதுஆட்சியோடு இணைத்துக்கொள்வதற்கு முனைவதாக ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில், உண்மையை மக்களால் மாற்ற முடியாது என்றும், உண்மை மக்களை மாற்றும் என்றும்குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மையில், அவருக்கு தற்போது என்ன செய்வதென்று தெரியாதுள்ளது. அவர் முன்னெடுத்த செயற்பாடுகள் அனைத்தும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ள நிலையில் தற்போது 'டீல்' அரசியல் பற்றி கதைகளைக் கூறிக்கொண்டிருக்கின்றார்.

அவருக்கு அறிவுரையொன்றை வழங்க வேண்டியுள்ளது. இந்தக்காலத்தில் சீனாவுக்கு குரங்குகளை அனுப்புவது பற்றி பேசப்படுகின்றது. சஜித் பிரேமதாச தொடர்ச்சியாகசத்தமிட்டுக்கொ-ண்டிருந்தார் என்றால் அவரையும் சீனாவுக்கு அனுப்பிவைத்துவிடுவார்கள்.

அதேநேரம், சஜித் பிரேமதாச உண்மையை பின்பற்றும் தலைவரைப் பிரிந்து சென்றுவிட்டு தற்போது உண்மை பற்றி வகுப்பெடுப்பதில் பயனில்லை -என்றார்.

OKAYA ELECTRIC VEHICLES

dsl
We lead the way...!

பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

The inEVitable
Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:

இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சீன ஆய்வுகூடங்களுக்கே இலங்கைக் குரங்குகள்

## சுற்றாடல் குறித்த அமைப்பு தகவல்

இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகள் சீனாவின் ஆய்வகங்களுக்கே அனுப்பப்படலாம் என இலங்கையை சேர்ந்த சுற்றாடல் நீதி அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகளை சோதனைக்கும் அழகுசாதனப்பொருள்களை சோதனை செய்வதற்கும் மருத்துவ பரிசோதனைகளுக்கும் சீனா பயன்படுத்தலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

மிருகக்காட்சிசாலைகளிற்கான சர்வதேச வரைவிலக்கணங்களின் படி சீனாவில் 18 மிருகக்காட்சிசாலைகளே உள்ளன என தெரிவித்துள்ள அவர் ஒரு மிருககாட்சிசாலைக்கு 5000 குரங்குகள் என கணக்கிட்டாலும் சீனா தெரிவிப்பது நம்பக்கூடிய விடயமாக இல்லை என தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஒரு லட்சம் குரங்குகளை சீனாவிற்கு அனுப்பினாலும் இலங்கையி;ல் குரங்குகளின் எண்ணிக்கை குறையப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகை குரங்குகளை தலதா மாளிகை அநுராதபுர மிகிந்தல போன்ற ஆலயங்கள் உள்ள பகுதிகளில் இருந்தே பிடிக்கவேண்டும் இந்த வகை குரங்குகளுக்கு மனிதர்கள் போல அந்த பகுதிகளில் வாழ்வதற்கான உரிமையுள்ளது எனவும் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.

இந்த வழிபாட்டுத்தலங்கள் உள்ள பகுதிகளில் இருந்து குரங்குகளை சீன ஆய்வுகூடங்களுக்கு அனுப்புவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இந்த முடிவை கைவிடுவார் எனக்கருதுகின்றோம், அமைச்சரால் தான் நினைத்தபடி விலங்குகளை வேறு நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது, ஆனால் வனவிலங்கு திணைக்களத்தின் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இல்லாவிட்டால் நாங்கள் நீதிமன்றம் செல்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முதற்கட்டத்தில் 500 குரங்குகளே சீனாவுக்கு ஏற்றி அனுப்பப்படும்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

சீனா ஒரு லட்சம் குரங்குகளைக் கேட்டிருந்தாலும் முதற்கட்டமாக 500 குரங்குகளே அங்கு அனுப்பப்படும் என்று விசவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனாவிடமிருந்து குரங்குகளை வழங்குமாறு எழுத்து மூலமான கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தவுடன், நானும், விவசாய அமைச்சின் செயலாளர், வனஉயிரிகள் திணைக்களத்தின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் சீனாவுடன் பல சுற்றுப்பேச்சுக்களை நடத்தியுள்ளோம்.

அத்துடன் களநிலைமைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து அறிக்கை பெற்றுள்ளோம். தற்போது அதற்கு அமைவாக அமைசரவை அனுமதிக்கான பத்திரமொன்று தயாரிக்கப்படவுள்ளது.

அதேநேரம், குறித்த விடயம் சம்பந்தமாக அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்ததன் பின்னரேயே இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

பலரும் கூறுவது போன்று ஒரு இலட்சம் குரங்குகளை முதலில் அனுப்பபோவதில்லை. முதற்கட்டமாக உரிய அனுமதிகளுக்கு அமைவாக 500 குரங்குகளே அனுப்பி வைக்கப்படும்.

இது தொடர்பில் பலர் விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். ஆனால் வருடம் தோறும் 200 மில்லியன் தேங்காய்கள் சீரழிக்கப்படுகின்றன. பல விவசாய உற்பத்திகள் நாசமாக்கப்படுகின்றன. ஆகவே அந்த விடயங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகின்றது - என்றார்.



# சீனாவுக்கு குரங்குகள் வழங்கல்: அமைச்சரவை பத்திரம் விரைவில்

## விவசாயத்துறை அமைச்சர் தகவல்

சீனாவுக்கு குரங்குகளை வழங்குவது தொடர்பான யோசனை அமைச்சரவைக்கு வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும். இந்த விடயம் தொடர்பில் சுற்றாடற்துறை ஆய்வாளர்களுடன் விரிவான பேச்சு முன்னெடுக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சீனாவுக்கு ஒரு லட்சம் குரங்குகளை வழங்கும் விவகாரம் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. தமது நாட்டு மிருககாட்சிசாலைகளுக்கு குரங்குகளை வழங்குமாறு சீன நாட்டு பிரதிநிகள் குழுவினர் விவசாயத்துறை அமைச்சுடன் மூன்று முறை பேச்சில் ஈடுப்பட்டுள்ளார்கள்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய நீதி, விவசாயத்துறை, பெருந்தோட்டத்துறை மற்றும் வனஜீவராசிகள் ஆகிய நான்கு அமைச்சுக்களை உள்ளடக்கிய வகையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சீனாவுக்கு முதற்கட்டமாக 500 முதல் 1000 வரையிலான குரங்குகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான யோசனை வெகுவிரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். மொத்த விவசாய உற்பத்தியில் அரை பங்கு பயிர்களைக் காட்டு விலங்குகள் அழிக்கின்றன.

காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கு சுற்றாடற்துறை ஆய்வாளர்கள் முன்வைத்த யோசனைகள் நடைமுறைக்குசாத்தியமற்றனவாகக் காணப்படுகின்றன.

சீனாவுக்கு குரங்குகளை வழங்குவது தொடர்பில் சுற்றாடற்துறை ஆய்வாளர்களுடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம். - என்றார்.

# பாம்பு கடித்து முல்லையில் முன்னாள் போராளி சாவு

முல்லைத்தீவில் மாறுத்திறனாளியான முன்னாள் போராளி ஒருவர் பாம்பு கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

பாலசுந்தரம் ஜெயதீஸ்வரன் (வயது 47) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிக்கன் குளம் கிராம அலுவலர் பிரிவின் கிழவன்குளம்பகுதியில் வசித்து வந்த இவரை வியாழக்கிழமை பாம்பு கடித்தது. உடனடியாகணுவைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டார்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரவில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனின்றி இறந்தார்.

## மசாஜ் செய்யசென்ற பிரான்ஸ்

# பெண்ணுடன் தவறாக நடக்க முயன்ற இரண்டு பேர் கைது

மசாஜ்செய்வதற்காகச்சென்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற நபரையும் அதற்கு உதவிய வர்த்தகரையும் தொடுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டு பெண் தொடுவை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் கைது செய்யப்பட்டுள்ளார். மாரவில - தல்வில பிரதேசத்தில் மசாஜ் நிலையம் ஒன்றை நடத்தி வந்த அதன்உரிமையாளரையும்அங்கு பணிபுரிந்த ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள்நடத்தும்மசாஜ் நிலையம்அனுமதிப்பத்திரம்இன்றி நடத்தப்பட்டமையும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 04 திங்கட்கிழமை 17.04.2023 கதிர் 31

## மனோவின் அரங்கத்துக்கு விக்னேஸ்வரனும் ஆதரவு



'நாடாளுமன்ற தமிழ் அரங்கம்' என்ற முன்மொழிவுக்கு, தமிழ்மக்கள்கூட்டணியின் செயலாளரும் முன்னாள் வடக்கு மாகாண முதல்வருமான நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன்தனது ஆதரவை

2

## கம்பளை விபத்தில் ஆஸி. பெண் சாவு



கண்டி மாவட்டத்துக்குட்பட்ட, கம்பளை, ஹேம்மாத்தகம வீதியில் இடம்பெற்ற கார் விபத்தில் ஆஸ்திரேலியப் பெண்ணொருவர் (வயது-67) உயிரிழந்தார்.

ஹேம்மாத்தகம நோக்கிப் பயணித்த கார் 12 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதிலேயே குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது சாரதி, பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவரது மகள் ஆகியோர் காரில் இருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மூவரும் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பெண் உயிரிழந்துள்ளார்.

சாரதியின் கவனமின்மையே விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. (02)

# வட- கிழக்கில் ஏப். 25 முழுக் கடையடைப்பு




## 5 தமிழ்க் கட்சிகள் கூடித் தீர்மானம்

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை நிறைவேற்ற இந்த ஆட்சி மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிராகவும் பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும்

ஏப்ரல் 25 வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் முழுமையான கதவடைப்புப் போராட்டம் நடத்த தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

தமிழ்க் கட்சிகளுக்கிடையில் யாழ்ப்பாணத்தில் இன்று நடந்த கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டிலுள்ள, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் குறித்த சந்திப்பு நடந்தது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 25 பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை ஆட்சியாளர்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றனர். இதனால், அன்றைய தினத்தில் வடக்கு கிழக்கில் முழுமையான கத வடைப்பை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (03)

## அடுத்த தலைவர் யார்? 'மொட்டு'க்குள் மோதல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புதிய தலைமைத்துவம் தொடர்பில் அக்கட்சிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மொட்டுக் கட்சியின் தற்போதைய தலைவராக மஹிந்த ராஜபக்ச செயற்படுகின்றார். இருந்தாலும் செயற்பாட்டு அரசியலுக்கு விடைகொடுக்கும் நிலைப்பாட்டிலேயே அவர் இருக்கின்றார்.

அத்துடன், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குக் கட்சியைத் தயார்படுத்தும் விதத்திலுமே மஹிந்த இந்த முடிவை எடுத்துள்ளார்.

அந்த வகையில் கட்சியின் ஸ்தாபகரும் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்சவைத் தலைவராக்க வேண்டும் என ஒரு தரப்பினரும், நாமல் ராஜபக்சவுக்கு தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என மற்றுமொரு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் தலைமைத்துவம் தொடர்பில் கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. மொட்டுக் கட்சியின் விசேட கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது. இதன்போது இவ்விவகாரம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

## இலங்கை தோல்வியுற்ற நாடு

### நாட்டின் அரசமைப்பு ஜனநாயகமானதல்ல என்கிறார் சந்திரிகா



1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற போது பொறாமைப்படக்கூடிய சமூகக் குறிகாட்டிகளைக் கொண்டிருந்தது. எனினும் 75 வயதில் இலங்கை ஒரு 'தோல்வியுற்ற நாடு' என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதுவர் மதன்ஜீத் சிங் விரிவுரையின்போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசிய அறக்கட்டளை மற்றும் சென்னை ஆசிய இதழியல் கல்லூரி என்பன இந்த மாநாட்டை இணைய வழியாக ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வின்போது மேலும் தமது கருத்துக்களைப் பதிவு செய்த சந்திரிகா தெரிவித்ததாவது:

75 ஆண்டுகள் என்பது ஒரு தேசம் கணிசமான முன்னேற்றத்தை அடைய எடுக்கும் நீண்ட காலமாகும்.

இந்த நிலையில் காலனித்துவ ஆட்சியாளர்களால் 450 வருடங்கள் அழிக்கப்பட்ட பின்னரும்கூட, சுதந்திரத்தின் போது, இலங்கை சிறந்த சமூக-பொருளாதார குறிகாட்டிகளில் சிலவற்றைக் கொண்டிருந்தது. எனினும், இன்று 75 வயதில், இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடாக மாறிவிட்டது - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்சக்களைக் குற்றஞ்சாட் டிய அதேவேளை, ஊழல் மற்றும் முறையற்ற தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இலங்கையின் தோல்வியே தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும் என்றும் முன்னாள் ஜனாதிபதி குறித்த நிகழ்வின் பின்னரான செவ்வியில் குறிப்பிட்டார் என 'தஹிந்து தெரிவித்துள்ளது.

ராஜபக்சக்கள் காலத்தில், நீதித்துறை, பொலிஸ் துறை மற்றும் பொதுச்

2

## மாகாணத் தேர்தல் திருத்த சட்டமூலம் ஏப்ரல் 25 வருகின்றது நாடாளுமன்றம்

### சுமந்திரன் எம்.பி. இன்று அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைந்து நடத்துவதற்காகத் தன்னால் முன்வைக்கப்பட்ட தனிநபர் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை ஏப்ரல் 25 நாடாளுமன்றத்தில் முன்வைக்க உள்ளதாகவும் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். இதற்கு ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினர் அனைவரும் ஆதரவை வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

யாழ். மாவட்டம் வடமராட்சியில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்து-வதற்கு உதவியாக நான் முன்னர் இரண்டு தடவைகள் சமர்ப்பித்ததை போல இந்தப் நாடாளுமன்றத்திலேயும் இரண்டுவாரங்களுக்கு முன்னர் ஒரு தனிநபர் சட்டமூலத்தைச் சமர்ப்பித்திருந்தேன்.

அதாவது பழைய முறையிலையே மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கான ஒரு இலகுவான சட்டத் திருத்தமொன்று முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு நான் கொடுத்த சட்டத்திருத்தம் மூலம் வர்த்தமானியிலே பிரசுரிக்கப்பட்டு விட்டதாகவும் அதை நான் விரும்பிய தினத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க

2

## தமிழ் இன அழிப்பு செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தை ஆதரியுங்கள்

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அழைப்பு

தமிழர் தாயகத்தில் செய-லுருப்பெறும் இன அழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழர் தாயகத்தில் செய-லுருப்பெறும் இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தக்கோரி ஏப்ரல் 19, புதன்கிழமை காலை.9.00 மணிக்கு, கிளிநொச்சி சேவைச் சந்தை வளாகத்தில் அடையாள எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. , இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் எற்பாட்டில், தியாகத்தாய் அன்னை பூபதி நினைவு நாளில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டதில் அனைத்துத் தரப்பினரையும் இணைந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

1. தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும்.

2. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதியைப் பெற்றுத்தரவேண்டும்.

3. அரசியல் கைதிகளின் விடுதலையை

2

## அதிவேக வீதியில் 26 வாகனங்கள் மோதி விபத்து

### எவருக்கும் காயம் இல்லை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஒன்றன்பின் ஒன்றாகப் பெருந்தொகையான வாகனங்கள் மோதி விபத் துக்குள்ளாகியுள்ளன.

தொடங்கொட நுழைவா-யிலுக்கு அருகில் நேற்றிரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் சுமார் 26 வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோதியுள்ளன என்று

2

## ராஜிதவை அமைச்சராக்கினால் ரோஹிதவுக்கும் பதவி வேண்டும்

### மொட்டுக் கட்சி விடாப்பிடி



ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு அமைச்சுப் பதவி வழங்கினால், அதே மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்கும் அமைச்சுப் பதவி வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளது.

ரோஹிதவுக்கு இன்றி ராஜிதவுக்கு மாத்திரம் அமைச்சுப் பதவியை வழங்கவேண்டாம் என்றும் ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பேச்சாளர்

2

# தேசிய அரசு யோசனை; டலஸ் அணி நிராகரிப்பு



தேசிய இணக்கப்பாட்டு அரசொன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை ஏற்காதிருக்க டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை தீர்மானித்துள்ளது.

டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட்பட மொட்டு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்தே சுதந்திர மக்கள் சபையை நிறுவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம், மத்திய வங்கிச் சட்டம் போன்ற விடயங்களில் கொள்கையளவில் உடன்பட முடியாது என்பதாலேயே தேசிய அரசு யோசனையை நிராகரிக்க டலஸ் அணி தீர்மானித்துள்ளது.

அதேவேளை, பரந்துபட்ட எதிரணிக் கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு டலஸ் அணி போராடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (02)

# ஏப். 20 அரிய வகை சூரிய கிரகணம்

ஏப்ரல் 20 ஆம் திகதி ஓர் அரிய வகை சூரிய கிரகணம் ஏற்பட உள்ளதாக நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார்.

இது அரிய கலப்பின சூரிய கிரகணம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் உலகின் சில பகுதிகளில் இது வளைய கிரகணமாகத் தோன்றும் முன், முழு கிரகணமாக மாறும் என்று கூறப்படுகிறது.

சந்திரன் சூரியனை முழுவதுமாக மறைக்காது, அதற்கு பதிலாக, அது சூரியன் மீது ஒரு சிறிய இருண்ட வட்டு போல் தோன்றும், இது 'நெருப்பு வளையம்' விளைவை உருவாகிறது எனத் தெரிவித்துள்ளார்.

'பூமியைச் சுற்றியுள்ள சந்திரனின் சுற்றுப்பாதை நீள்வட்டமாக இருப்பதால், பூமியிலிருந்து சந்திரனின் தூரம் அதன் சராசரி மதிப்பீட்டிருந்து சுமார் 6 வீதம் மாறுபடும்.

எனவே, சந்திரனின் வெளிப்படையான அளவு பூமியிலிருந்து அதன் தூரத்தைப் பொறுத்து மாறுபடும், மேலும் இந்த விளைவுதான் முழு மற்றும் வளைய கிரகணங்களுக்கு இடையிலான மாற்றம் என்று பேராசிரியர் ஜெயரத்ன ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த கிரகணம், இலங்கையில் தென்படாது என்றும் மேற்கு ஆஸ்திரேலியா, கிழக்கு திமோர் மற்றும் கிழக்கு இந்தோனேசிய தீவுகளில் உள்ள சில பகுதிகளுக்கு நன்றாகத் தென்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

உலக சனத்தொகையில் 8.77 வீதமானவர்களுக்கு மட்டுமே சூரிய கிரகணம் தெரியும் எனவும், இலங்கை மற்றும் உலகின் பல பகுதிகளுக்கு இது நேரடியாகத் தென்படாது எனவும் பேராசிரியர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஏப்ரல் 20 ஆம் திகதி ஏற்பட உள்ள இந்த ஆண்டின் முதல் சூரிய கிரகணம் இலங்கை நேரப்படி, இந்து சமுத்திரத்தில் காலை 7.04 மணிக்கு கிரகணம் ஆரம்பித்து பசுபிக் சமுத்திரத்தில் 12.29 மணிக்கு நிறைவடையும்.

கலப்பின கிரகணங்கள் மிகவும் அரிதானவை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் 03, 2013 அன்று கலப்பு சூரிய கிரகணம் ஏற்பட்டது. மற்றும் அடுத்த கலப்பின சூரிய கிரகணம் நவம்பர் 2031 இல் நிகழும்.

இந்த கிரகணத்தை இலங்கையில் காண முடியாவிட்டாலும், பல இணையத்தளங்கள் மூலம் இதனை நேரடியாக அவதானிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## நீண்ட கால கஞ்சா வியாபாரி இன்று கைது



நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் தம்மால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 35 வயதுடையவர். காங்கேசன்துறை வீதி கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர். இரகசியத் தகவலின் அடிப்படையில் இன்று சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஒரு தொகுதி கஞ்சா மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளார் என்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை உட்பட ஜனநாயக நிர் வாகத்தின் முக்கிய தூண்களில் பர வலான ஊழல் ஊடுருவியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இலங்கை, பல்லின மற்றும் சகல மத சமூகங்களை ஒன்றிணைத்து ஒரு ஐக்கிய பன்மைத் துவ அரசை உருவாக்கத் தவறிவிட்டது என்றும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மையினரின் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு, அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமைகள் மற் றும் சிறுபான்மையினருடன் அரசியல் அதிகாரப் பகிர்வு முறையை உறுதிப்படுத்த கடந்த 75 ஆண்டுகளாக தவறி விட்டோம் என இரண்டு முறை ஜனாதிபதியாகப் பதவி வகித்த சந்திகா தெரிவித்துள்ளார்.

அதேநேரம், 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் தற்போதைய அரசமைப்பு ஜனநாயகமானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2000ஆம் ஆண்டில் புதிய அரசமைப்புக்கான தமது சொந்த முன்மொழிவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (02)

## மனோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்.

இதன்படி ரெலோ, புளொட், மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகள் தமது அதிகார பூர்வ ஆதரவை, தமிழ் முற்போக்குக் கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு மேலதிகமாகத் தெரிவித்துள்ளன என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (02)

## 26 வாகனங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர். வாகனங்களுக்கு இடையில் போதிய இடைவெளி விடாமல் சென்றமையே இந்த விபத்திற்குக் காரணம் என்று அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் வாகனங்கள் சேதம் அடைந்த போதிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (02)

## மாகாணத்...

முடியுமென்றும் நாடாளுமன்றத்தில் இருந்து இன்றைக்கு எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் 25 காலையிலே அந்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்க இருக்கிறேன். அது சமர்ப்பிக்கப்படுவது முதலாவது வாசிப்பாக இருக்கும். நாடாளுமன்றம் அதனை ஏற்றுக் கொண்டால் இரண்டு வாரங்களுக்கு பின்னர் அதனைச் சட்டமாக இயற்ற முடியும்.

ஆகையினால் இந்த விடயத்திலே நாடாளுமன்றம் தீர்க்கமாகச் செயற்படவேண்டும். பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருக்கிற மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இருக்கிற சட்டச் சிக்கலை நீக்குவதற்கான வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதை நாடாளுமன்றத்திலே நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்களும் மற்றக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடுகின்ற காரணத்தினாலே மாகாண சபைத் தேர்தலையும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் ஒரு நாளிலேகூட நடத்தலாம். அப்படி நடத்துவதனால் வருகின்ற செலவுகளை மிக மிகக் குறைவாக்க முடியும். அரைவாசியாகக்கூட ஆக்கமுடியும்.

அதனாலே எனது சட்டமூலத்தையும் நிறைவேற்றி, இப்பொழுது காலம் கடந்து கொண்டிருக்கிற உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் ஒரே நாளில் வைப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும். எனினும் அதற்கு முன்னதாக இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை. ஆனால் இதை நான் ஏப்ரல் 25 நாடாளுமன்றில் சமர்ப்பிக்கிற பொழுது உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தால் இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையா இல்லையா என உச்சநீதிமன்றம் தீர்மானம் செய்யும். அப்படித் தேவைப்படாது என்பது என்னுடைய கருத்து. அது நிறைவேற்றப்பட்டால் உடனடியாக தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரிதப்படுத்தவேண்டும். 4. இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த அரச திணைக்களங்களால், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் சமகாலத்தில் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும்.

5. அட்டைப் பண்ணைகள், இறால் பண்ணைகள் அமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் கடல்வள அபகரிப்பை கைவிடக் கோரவேண்டும்.

6. சீன நாட்டின் முதலீட்டாளர்களுக்கு கிளிநொச்சியின் காணிகளை தாரைவார்ப்பதை தடுத்து நிறுத்தவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அழைப்பு விடுத்துள்ளார். (03)

## ராஜிதவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தெரிவித்தார்.

ரோஹித அபேகுணவர்தன கட்சியின் வளர்ச்சிக்காக அதிக அர்ப்பணிப்புகளை மேற்கொண்டவர் எனவும், இந்நிலையில் ராஜித சேனா ரத்னவுக்கு அமைச்சுப் பதவி வழங்கினால் அது ngu-k அநீதி எனவும் ஜனாதிபதியிடம் பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டியுள்ளது.

ராஜித சேனாரத்ன விரைவில் புதிய அமைச் சுப் பதவியை ஏற்கத் தயாராக இருக்கிறார் என்று கடந்த சில வாரங்களாகச் செய்திகள் வெளியாகின.

இதேவேளை, அமைச்சுப்பதவிகளுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெயர்ப் பட்டியலும் கடந்த காலங்களில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (02)

## யாழ். இந்துக் கல்லூரி

# முன்னாள் ஆசிரியர் சர்மா தொடருந்து மோதி இறப்பு




யாழ்ப்பாணம் – மல்லாகம் பகுதியில் தொடருந்துடன் மோதி முதியவரொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இன்று காலை 6.45 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிவசுப்பிரமணிய சர்மா (வயது 80) என்கிற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அளுத்கம தர்கா நகரில் தீப் பரவல்: தீயணைப்புபடை அணைக்கும் பணியில்!

அளுத்கமவின் தர்கா நகரில் உள்ள அம்பகஹா சந்தி எரிபொருள் நிரப்பு நிலையதத்துக்கு முன்பாக உள்ள புகைப்படக் கூடத்தில் தீப் பரவல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இன்று (திங்கட்கிழமை) முற்பகல் 11 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை மாநகர சபையின் தீயணைப்பு வாகனங்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வந்து கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. அளுத்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மதுபோதையில் வீட்டுக்குச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் தந்தையையும் தாக்கி உடைமைகளையும் சேதமாக்கினார்!

குருணாகல், அலவ்வ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் புத்தாண்டு தினத்தன்று மதுபோதையில் வீட்டுக்குச் சென்று தனது தந்தையை தாக்கி வீட்டில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் வலஸ்முல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனையடுத்து 15 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் சந்தேக நபர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருணாகல் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் சந்தன அபேசிங்கவின் பணிப்பின் பேரில், முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

# 3 லீற்றருக்கும் அதிகமாக தினமும் நீர் அருந்துங்கள்!

## வைத்தியர் யமுனாநந்தா ஆலோசனை



தினமும் மூன்று லீற்றருக்கும் அதிகமான நீரினை பருகுங்கள் என யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

கடுமையான வெப்பமான கால நிலை நிலவி வருவதால், உடலில் உள்ள நீர் சத்துக்கள் இழக்கப்படும். அதனால் சூரியன் உச்சம் கொடுக்கும் மதிய நேரங்களில் வெளி பயணங்களை தவிர்த்து கொள்ளுங்கள்.

தினமும் 3 லீற்றர் வரையில் நீர் அருந்துங்கள். அத்துடன், போதியளவு நீராகாரங்கள் அருந்துங்கள். நீர் தன்மையுள்ள வெள்ளரிப் பழம் போன்றவற்றை உண்ணுங்கள் என வைத்தியர் யமுனாநந்தா தெரிவித்தார்.

# யாழில் டெங்கு காய்ச்சலால் பெண் சிப்பாய் உயிரிழப்பு!



டெங்கு நோயால் பெண் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகர் இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த கொழும்பைச் சேர்ந்த எம்.கே.செவ்வந்தி எனும் பெண் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

கடந்த 05 ஆம் திகதி காய்ச்சல் காரணமாக பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில், மருத்துவ பரிசோதனையில் டெங்கு காய்ச்சல் உறுதியானது.

அதனையடுத்து 07 ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# இலங்கைக் குரங்குகளை அமெரிக்காவும் கோருகிறது

## சீனாவுக்கு போட்டியாக



இலங்கையில் இருந்து குரங்குகளைப் பெற சீனா தயாராகி வருவதாக தகவல் கிடைத்ததையடுத்து, குரங்குகளைப் பெற அமெரிக்காவும் விண்ணப்பித்துள்ளது.

எவ்வாறாயினும், அமெரிக்காவுக்குத் தேவையான குரங்குகளின் எண்ணிக்கை இதுவரை அறிவிக்கப்படவில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு ஒரு லட்சம் குரங்குகளை வழங்குவதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சுமந்திரன், சம்மந்தனால் கிழக்கை மீட்க முடியாது

## இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எகத்தாளம்










(வி.ரி. சகாதேவராஜா)

சுமந்திரனாலோ சம்மந்தன் ஐயா வினாலோ கிழக்கை மீட்க முடியாது. கிழக்கு மாகாணத்தில் உறுதியான தலைமைத்து–வத்தை ஏற்படுத்தி மாகாணத்தை மீட்டுக் கட்டிஎழுப்புவதற்கு எமது கட்சி முயற்சி எடுத்து வருகிறது. நிச்சயமாகக்

கிழக்கைக் கட்டியெழுப்ப முடியும். எனவே அனைவரும் ஒன்றுபடவேண்டும்.

இவ்வாறு அறைகூவல் விடுத்தார் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன்.

காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலானந்தா சனசமூக நிலையமும் கல்முனை சொர்ணம் நகைமாளிகையினரும் இணைந்து நடாத்திய வெள்ளிவிழா சித்திரை புத்தாண்டு கலாச்சார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் தலைவர் த.தவக்குமார் தலைமையில் சனிக்கிழமை மாலை விபுலானந்தா மைதானத்தில் கலாசார விளையாட்டு விழா இடம்பெற்றது.

விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேன் சீர்பெறு அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அங்கு சந்திரகாந்தன் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கில் அம்பாறை மாவட்டம் தனித்துவமானது. அங்கு தமிழ் மக்கள் இன்னோரன்ன சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றார்கள். உகந்தை மலையில் சிலை அமைக்கவேண்டும் . இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

இவற்றை வென்றெடுக்க வேண்டுமாக இருந்தால் அம்பாறை மாவட்டத்திற்கு என்று தனித்துவமான அரசியலை முன்கொண்டு செல்லவேண்டும் . பிரதேச சபை என்றாலும் சரி மாகாண சபை என்றாலும் வெவ்வேறு தீர்மானம்

வேண்டும். நாடாளுமன்றம் என்றால் மற்றுமொரு விதமான தீர்மானம் எடுக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தல் என்றால் இன்னும் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அப்படி என்றால் மட்டுமே அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சாத்தியமாகும். இல்லாவிட்டால் நாங்கள் எதையும் பெற முடிய–ாது. நடுத்தெருவில் நிற்க வேண்டிவரும் .

காரைதீவு கலாச்சாரம் பண்பாட்டுக்கு பேர் போன ஊர். உலகறிந்த மாமனிதர் சுவாமி விபுலானந்தர் பிறந்த புண்ணிய பூமி. வடக்கு கிழக்கிலே சமூக மாற்றத்தை அன்று ஏற்படுத்திய அந்த மகான் பிறந்த காரைதீவு மண் மகத்துவம்மிக்கது. இங்கு உள்ளக விளையாட்ரங்கு நிறைவுற முப்பது மில்லியன் ரூபாய் தேவை என்று தலைவர் சொன்னார். இன்றைய நெருக்கடியான நிலையில் இது சற்று சிரமமாக இருந்தாலும் இரண்டு மூன்று மாதங்களிலே இதற்கான கூரை அமைக்கும் வேலையை தொடங்கிச் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றேன். நீங்களும் அதற்கான முயற்சியை எடுக்கவேண்டும் .

1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மட்டக்களப்பிலிருந்து பிரிந்து அம்பாறை மாவட்டம் தோற்றம்பெற்ற பொழுது காரைதீவு தம்பிலுவில் திருக்கோயில் ஆலையடிவேம்பு என்று பல தனித்துவமான தமிழ்க் கிராமங்கள் போராட்டத்தில்

அதிக அக்கறையை பங்களிப்பைச் செய்தன. அதன் காரணமாக பல பின்னடைவுகளை சந்தித்தன. எப்படி இருந்தாலும் கிழக்கின் ஓர் அங்கமே அம்பாறை மாவட்டம். எனவே அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியங்கள் பொருளாதார அபிவிருத்தி கல்வி விருத்தி போன்றவற்றில் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இங்குமீட்பர்கள்என்றுபலரும்வருவார்கள். இங்கு சுமந்திரனோ சம்பந்தன் ஐயாவோ வந்து கிழக்கை மீட்க முடியாது. முன்னாள் தளபதி இங்கு வந்து வீர வசனங்களை பேசி உசிப்பேற்றிவிட்டு போய்விட்டார். இன்றும் தமிழ் மக்கள்

நிர்க்கதியாக இருக்கின்றார்கள். எனவே உறுதியான தரமானதாக தலைமைத்து–வங்களை கிழக்கிலே ஏற்படுத்தவேண்டும் என்று எமது தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி மும்முரமாக பயணித்து வருகின்றது. மட்டக்களப்பு எவ்வாறு உள்ளதோ அவ்வாறு அம்பாறை மாவட்டத்திலும் உங்களது ஒத்துழைப்பு இருக்குமாக இருந்தால் கிழக்கை மீட்டெடுத்து அபிவிருத்தி

செய்வது ஒரு பெரும் பிரச்சனையாக இருக்காது. நாங்கள் தரமான உறுதியான தலைவர்களைத் தேடி அவர்களை உருவாக்கி வருகின்றோம். அதனூடாக நிச்சயமாகக் கிழக்கை மீட்டு அதனைக் கட்டி எழுப்புவோம் – என்றார்.

## நையினாமடுவில் விபத்து இளம் குடும்பஸ்தர் இறப்பு




வவுனியா நையினாமடு பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார். அவரது மனைவி காயமடைந்துள்ளார்.

நெடுங்கேணி பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த செட்டிகுளம் கப்பாச்சியை சேர்ந்த 23 வயதுடைய ராமலிங்கம் அனுசனும் அவரது மனைவியும் முன்னாள் சென்றுகொண்டிருந்த பட்டா ரக வாகனத்தில் பின்புறமாக மோதுண்டுள்ளனர். இதன் காரணமாக மோட்டார் சைக்கிளை செலுத்திய அனுசன் பலத்த காயமடைந்து உயிரிழந்தார மனைவி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இவ் விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் 6 பேர் சாவு!

### ஐவர் காயம்

நாட்டின் வெள;வேறு பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துக்களில் ஆஸ்திரேலிய பிரஜை உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஐவர் காயமடைந்துள்ளனர்.

ஹெம்மாத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பலத்கமுவ பிரதேசத்தில் கம்பளையில் இருந்து ஹெம்மாத்தகம நோக்கி பயணித்துகொண்டிருந்த காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சுமார் 12 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது காயமடைந்த காரின் சாரதி மற் றும் அதில் பயணித்த இரு வெளிநாட்டு பெண் பிரஜைகள்கம்பொலவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 67 வய-துடைய ஆஸ்திரேலியா பிரஜையாவர்.

மேலும், கிரியுல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போபிட்டிய பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றுமொரு மோட்டார்சைக்கிளில் மோதியதில் 22 வய-துடைய கந்தெவத்த பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்உயிரிழந்துள்ளார்.

இதே வேளை, மரதன்கடவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அநுராதபுரம்-தம்புள்ளை ஏ 9 வீதியின் 101 இலக்க கட்டைபகுதியில் கேகிரவா நோக்கி பயணித்த கார் வேகக்கட்டுப்பாடையிழந்து எதிர்திசையில் வந்த மோட்டார் சைகிளில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த நபர் மற்றும் அவரதுமனைவி,மகள்காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 49 வய-துடையஹல்மில்லேவ,மரதன் கடவலபிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

மேலும், ஒயாமடுல்ல பொலிஸ் பிரிவின் 14 இலக்க கட்டை பகுதியில் ஒயாமடுவ நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வேக்கட்டுப்பாட்டையி-ழந்து எதிர்திசையில் வந்த உழவு இயந்திரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியதில் பெமடுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த19வயதுடையஇளைஞர் உயிரிழந்துள்ளார்.

இதே வேளை, புளியங்குளம் பொலிஸ் பிரிவின் 9 இலக்க கட்டை பகுதியில்முல்லைத்தீவுநோக்கி பயணித்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது கெப் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது 23 வய-துடைய முதலியார் குளம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பூகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிந்திவெல-பூகொட பிரதானவீதி




யில்மோட்டார்சைக்கிள்வீதியில்சென்றுக்கொண்டிருந்த பாதசாரி மீது மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் போது காயமடைந்த பாதசாரி, மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் மற்றும் பின்னால்அமர்ந்துபயணித்த நபரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் பாதசாரி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. விபத்துக்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளைபொலிஸார் முன்னெடுத்துள்ளனர்எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்கவேண்டும்

மாகாண சபைகள் தேர்தல்கள் தொடர்பான தனிநபர் திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான வழிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட இந்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதனைச் சித்திரை 25 நாடாளுமன்றத்தில் அவர் முன்வைக்கப் போகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளாகிவிட்டன மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு. 2018 நடந்த உள்ளூராட்சித் தேர்தல் வழக்கமான பிரதிநிதித்துவ முறையில் இருந்து மாற்றப்பட்ட புதிய கலப்புத் தேர்தல் முறையில் நடத்தப்பட்டது. புதிய கலப்புத் தேர்தல் முறையின் கீழ் தொகுதி மற்றும் பிரதிநிதித்துவ முறைகள் கலந்திருந்தன. இது பெரும்பாலான சபைகளில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை எந்த முறையின் கீழ் நடத்துவது என்கிற கேள்வி எழுந்தது.

உள்ளூராட்சி சபைகளில் நிகழ்ந்ததைப் போன்று தொங்கு சபைகள் நாடாளுமன்றத்தில் அமைந்திடுமோ என்கிற அச்சத்தில் அப்போது இருந்தன முக்கிய கட்சிகள். அதற்கு முன்னதாக புதிய தேர்தல் முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின் மாகாண சபைகளுக்கான தொகுதி நிர்ணயங்களைச் செய்யவேண்டிய தேவையும் இருந்தது. எனவே அதற்கான கால அவகாசத்தைக் கொடுக்கும் வகையில் தேர்தலை ஒத்துவைக்கும் சட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றியது மைத்திரி – ரணில் கூட்டில் அமைந்த நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ஆட்சி. அதற்கு எல்லாக் கட்சிகளினதும் ஆசீர்வாதமும் கிடைத்தது. ஏனெனில் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது தொடர்பில் கட்சிகள் அப்போது குழப்பத்தில் இருந்தன.

அத்தோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் உட்பட பலமாகாண சபைகளுக்கும் வேறுவேறு திகதிகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்ததால் அவற்றின் நிறைவுக் காலமும் வேறு வேறாக இருந்தது. செலவுகளைக் குறைக்கும் வகையில் அவற்றை ஒரே நாளுக்கு மாற்றுவதும் ஆட்சியாளர்களின் நோக்கங்களில் ஒன்றாக அப்போது காட்டப்பட்டது. இப்படி பல ஊள்நோக்கங்களோடு மாகாண சபைத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால், பின்னர் எந்தத் தேர்தல் முறையின் கீழ் அந்தத் தேர்தலை நடத்துவது என்பதில் கட்சிகளிடையே இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பதைக் காரணம் காட்டியே பல வருடங்களாகத் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது.

இதற்கான மாற்றாக ஒரு சட்டத் திருத்தத்தின் மூலம் பழைய தேர்தல் முறைக்கே சென்று மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என்பதுதான் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் வாதமாக இருந்தது. அதற்காகத்தான் அவர் தனிநபர் சட்டமூலத்தையும் முன்வைத்தார். கொள்கையளவில் அது ஏற்கப்பட்டு அப்போதும் அரசிதழ் [வர்த்தமானி] அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால், பின்னர் அது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவில்லை. அதனால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை.

இப்போது அந்தத் தனிநபர் சட்டமூலமே நாடாளுமன்றத்தில் சித்திரை 25 வரவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படி வரும்போது அனைத்துக் கட்சியினரும் அதற்கு ஆதரவு தெரிவித்து அதனை நிறைவேற்றவேண்டும். அதன் மூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான வழியைத் திறந்துவிடவேண்டும். பழைய பிரதிநிதித்துவ முயையின் கீழ் இருப்பதைவிட புதிய கலப்பு முறையில் தமக்கு அதிக நன்மை, வாய்ப்பு கிடைப்பதாக சிறு கட்சிகள் எண்ணுகின்றன என்பது யதார்த்தம்தான். ஆனால், அது அவற்றின் உரிமையும்கூட. எனினும் எதுவுமே இல்லாமல் இருப்பதைவிட ஏதோ இருப்பது மேல் என்கிற அளவிலாவது பழைய முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இந்தச் சிறு கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்கூட இலங்கையின் ஒற்றையாட்சி முறையிலிருந்து ஒரு மாற்றத்தை நோக்கிய நகர்வை முன்வைத்தது மாகாண சபைகள் கட்டமைப்பு என்பதில் உண்மையுண்டு. எனவே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படும் வரையில் அந்த முதல் நகர்வு மீண்டும் பின்னோக்கிச் செல்லாமல் காக்கவேண்டியதும் அரசியல்கட்சிகளின் கடமை.

# புனிதமான எமது தொழிலை அரசு புதினமாக பார்க்கிறது

## ஆசிரியர்கள் கவலை



மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள் மடம் – அம்பிளாந்துறை ஓடத்துறையில் சேவையிலீடுபடும் படகுப்பததையில் கட்டணம் செலுத்தி தாம் பயணிக்க முடியாது எனத் தெரிவித்ததையடுத்து திங்கட்கிழமை குறித்த பாதைப்போக்குவரத்து சுமார் 3 மணித்தியாலங்கள் குருக்கள்மடம் துறையில் தடைப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

பாடசாலையின் புதிய தவணைக்கான ஆரம்பநாளான இன்று (திங்கட்கிழமை) குறித்த படகுப் பாதை ஊடாக போக்குவரத்துச் செய்யும் அதிகளவு அதிபர், ஆசிரியர்களும், ஏனைய அரச மற்றும் அரச சாா்பற்ற உத்தியோகத்தர்களும், காலை 7 மணிக்கு படகுப்பாதை படுவாங்கரைப் பகுதிக்குப் புறப்படும் நேரத்துக்கு வழக்கமாகச் செல்வது போன்று குருக்கள் மடம் கறைக்குச் சென்றுள்ளனர்.

வழக்கம் போல் அனைவரும் அதற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாதையில் ஏறியுள்ளனர். அங்கிருந்த வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் பற்றுச் சீட்டுக்களைக் கொடுத்து கட்டணம் செலுத்துமாறு தெரிவித்ததையடுத்து அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

தாம் இதுவரை காலமும் இப்படகுப் பாதையூடாக எதுவித கட்டணங்களுமின்றியே பயணம் செய்து அதிக கஷ்டப் பிரதேசங்களுக்கு மிகவும் தொலை தூரம் சென்று மாணவர்களுக்கு கல்வி புகட்டி வருகின்றோம். திடீரென எம்மிடம் நிதி வசூலிப்பது என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்ததையடுத்து குறித்த பாதைப் போக்குவரத்து சேவையிலீடுபடாமல் காலை 9 மணிவரையில் தடைப்பட்டிருந்தது. பின்னர் அங்கிருந்த அரச உத்தி யோகத்தர்கள் தம்மால் கட்டணம் செலுத்தி இப்பாதையில் பயணம் செய்ய முடியாது எனத் தெரிவித்து கடமைக்குச் செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். 10 வருடங்களைக் கடந்தும் மிக நீண்டதூரம் பணயம் செய்து அதி கஷ்டப்பாடசாலை மாணவர்களுக்கு நாம் கல்வி புகட்டி வருகின்றோம்.

தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில், எமக்கு அரசாங்கத்தால் மாதாந்தம் வழங்கப்படும் வேதனமே போதாது. எமது புனிதமான தொழிலை அரசாங்கம் புதினமாகப் பார்ப்பது எமக்கு கவலையளிக்கின்றது.

எனவே இதுவரை காலமும் நடைமுறையிலிருந்தது போல் எதுவித கட்டணங்களுமின்றி நாம் பயணம் செய்து எமது சேவையைத் தொடர்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்.

சுமார் 5 வருடங்கள் அதி கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றினால் நாங்கள் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியும்.

ஆனாலும் அவ்வாறு இடமாற்றம் பெறாமல் 10 வருடங்கள் கழிந்த நிலையிலும் அப்பகுதி மாணவர்களின் நலன்கருதி இதுவரையில் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்காமல் சேவை செய்து வருகின்றோம்.

இந்நிலையில் நாம் பயணிக்கும் படகுப்பாதைக்கும் கட்டணம் அறவீடு செய்யதால் நாம் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல நேரிடும் இது தொடரிபில் எமது உயர் அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளோம் என இதன்போது ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

# அரிசி, சீனி மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு?

அரிசி, சீனி மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியங்கள் காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிப்பதால் இவ்வாறு பொருள்களின் விலைகள் உயரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்கலன் போக்குவரத்து தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளன.

வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளமை காரணமாக இறக்குமதியாளர்கள் இந்தக் கட்டணங்களை ஏற்க நேரிட்டுள்ளதாகவும் இதன் சுமை நுகர்வோரையே சென்றடையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அன்றாடம் நுகரும் சீனி, அரிசி மற்றும் பருப்பு போன்ற பொருள்களின் விலைகளில் இந்த போக்குவரத்து கட்டணங்கள் தாக்கம் செலுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதியாளர்கள் உள்ளிட்ட உரிய தரப்புக்களுடன் பேச்சு நடத்தாது வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்தமையால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என சீனி இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் ஜீ.எம். அபேசேகர தெரிவித்துள்ளார்.

# வாகன விபத்தில் சிக்கி ரஞ்சித் வைத்தியசாலையில்!

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வாகனம் விபத்துக்குள்ளானதில் காயமடைந்துள்ளார்.

கேகாலை – அவிசாவளை பிரதான வீதியின் ருவன்வெல்ல, கரவனெல்ல பிரதேசத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பயணித்த கார் கரவனெல்ல வீதிக்கு அருகில் இருந்த சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் சிறு காயங்களுக்கு உள்ளாகிய ரஞ்சித் சியம்பலாபிட்டிய கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், அமைச்சரின் உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு!

ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் தென் மாகாணத்தைப் பார்வையிட வந்துள்ள தாகக் கூறப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகள் உனவடுன சுற்றுலா வலயத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாம்புக் கடிக்கு இலக்காகிய 5 பிள்ளைகளின் தந்தையான மாற்றுத்திறனாளி முல்லையில் பலி!

முல்லைத்தீவு மாங்குளம் பிரதேசத்துக்கு உட்பட்ட கிழவன்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு அடித்து குற்றுயிராய் கிடந்த பாம்பை கையினால் தூக்கியதில் பாம்பு கடிக்கு இலக்காகிய நபர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் கிழவன் குளத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் (வயது–47) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

# மருதமுனை 65 மீற்றர் வீடுகளை கையளிக்க துரிதமாகச் செயற்பட்டவர்களுக்கு நன்றிகள்!

## யஹியாகான் கூறுகிறார்

மருதமுனை 65 மீற்றர் வீடுகளை கையளிக்க துரிதமாக செயற்பட்ட அரசாங்க அதிபர் மற்றும் கல்முனை பிரதேச செயலாளருக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் தெரிவித்துள்ளார்.

இந்த பகிர்ந்தளிப்பை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த சிலர் எடுக்கும் முயற்சி அருவருப்பானது என்றும் யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீடற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடுகளை வழங்க துரித முயற்சி எடுக்காத சிலர் இந்த விடயத்தில் பெயர் போட்டுக்கொள்ள முயற்சிப்பதை மருதமுனை மக்கள் கூட ஏற்றுக்கொள்ள தயாரில்லை.

நிகழ்வில் உரையாற்றிய பிரதேச செயலாளர் முன்னாள் மற்றும் இன்னாள் அரசாங்க அதிபர்கள் இந்த விடயத்தில் காட்டிய அர்ப்பணிப்பை வெளிப்படையாகவே பேசினார்.

அந்த உரையின் மூலம் – உண்மையாக வீடு பகிர்ந்தளிப்பில் யார் செயற்பட்டார்கள் என்பதை உணர முடிந்தது. உண்மையில் அரசாங்க அதிபர் டக்ளஸ் மற்றும் கல்முனை பிரதேச செயலாளர் லியாக்கத் அலி ஆகியோரே பாராட்டுக்கும் நன்றிக்கும் உரித்துடையவர்கள்.



ஆக , மருதமுனை வீடுகள் கையளிப்பு போன்று மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் நிர்மாணிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாத வீடுகளையும் வழங்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் சார்பாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.